ஹோமியோபதி

நிர்வாக ஆசிரியர் : டாக்டர் V. R. மூர்த்தி

செப்டம்பர் 1952

கிராம வைத்திய சேவை 2
ஜலதோஷம் 5
பாலுண்ணி 7
சிகிச்சைக் குறிப்பு 8
பிரசவ உன்மத்தம் 9
ஒரு தம்பிடியில் காலரா சிகிச்சை 11
ஹோமியோபதியின் சாரம் 14
மாகாண நிகழ்ச்சிகள் 19

டாக்டர் மூர்த்தியின்

H. P. P. ஔஷதங்கள்

1 முதல் 24 ஔஷதங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு முக்கியமான வியாதிக்கு ஏற்றது.

இது சம்பந்தமான புத்தகத்திற்கு எழுதவும்

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்

ஹோமியோ ஹவுஸ் கும்பகோணம்

ஹோமியோபதி

VOL. 6 1952 செப்டம்பர் No. 6

கிராம வைத்தியசேவை

நமது தேசத்தில் இன்று கிராமாந்திரங்களில் வாழும் மக்களுக்குக் கிடைக்கும் வைத்திய வசதிகள் மிகமிகக் குறைவு என்பதும், அவ்வாறு கிடைக்கும் வசதிகளும் சர்க்காரின் முயற்சியினுலோ ஆதரவினுலோ கிடைப்பது அல்லவென்பதும் அனைவருக்கும் தெரிந்த உண்மை. பல வருடங்களுக்குமுன் "ரூரல் டிஸ்பென்ஸரி" முறை அமுலுக்குக் கொண்டுவரப்பட்டு இத் திட்டத்தின்மூலம் கிராம மக்களுக்கு வைத்திய வசதி யளிக்கப்பட்டது. அல்லோபதியில் மேல் படிப்பாகிய M. B., B. S. கீழ்ப்படிப்பாகிய L. M. P. என்று இரு பிரிவுகள் இருந்தபோது, இந்த ரூரல் டிஸ்பென்ஸரிகளுக்கு L. M. P.க்களில் அனேகர் டாக்டர்களாக இருந்தார்கள். ஆனுல் டாக்டர் ராஜன் நமது மாகாணத்தின் சுகாதாரப் பொறுப்பை ஏற்றவுடன், அல்லோபதிப் படிப்பில் இரு தரங்கள் இருக்கக் கூடாது என்ற கொள்கை ஒன்றைக் கொண்டுவந்து புகுத்தி கீழ்ப்படிப் பாகிய L. M. P.யை அடியோடு எடுத்துவிட்டார். இன்று வைத்திய விஷயத்தில் ஒரே படிப்பு, உயர்தரப்படிப்பு, என்கிற கொள்கைகள் அல்லோ பதியர்களின் தீவிரப் படிப்பில் இருக்கிறது. இந்தப் படிப்புக்கு ஏற்படும் செலவுகள் அபாரம், செலவிடப்படும் காலம் பல வருடங்கள், இவைகளுக் கும் ஈடு கொடுக்கிறோம் என்று வரும் தகுதியானவர்களுக்கு கல்லூரிகளில் இடமில்லை. கல்லூரிக்ளில் சேர்ப்பதற்கு ஒருமுறை, இதில் 'தகுதி'க்குச் சலுகை கிடையாது; இவைகளெல்லாம் ஒன்று சேர்ந்து இன்று நம்நாட்டு வைத்தியத் தேவை என்றும் தேவையாகவே இருந்து வருகிறது.

இந்த நிலைமையில் ஜஸ்டிஸ்கட்சி மாகாணத்தில் அரசாண்ட காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட இந்திய வைத்தியக்கல்லூரி கிராம வைத்தியத் தேவையை ஒருவாறு பூர்த்திசெய்ய முயன்று வந்தது. இங்கு குறைந்த செலவில் படித்துத் தேர்ச்சி பெற்றவர்களில் அனேகர் கிராமங்களில் குடியேறி மக்களுக்குத் தொண்டாற்றி வந்தனர். இவ்வாறு ஒரு பயிற்சித்திட்டம் இருந்துங்கூட, போதிய டாக்டர்கள் கிடைக்காமல் அனேக ரூரல் டிஸ்பென் ஸரிகள் பல வருடங்களாக மூடியே கிடக்கின்றன. இந்த சூழ்நிலையில், இந்திய

வைத்தியக் கல்லூரியிலும், குறுகியகாலப் படிப்பாகிய L. I. M. மூடப்பட்டு விட்டது. இங்கும் ஒரு நீண்ட கால, காலமும் பொருளும் அதிகச் செலவுள்ள, ஒரு படிப்புத்தான் பாக்கி. ஆகவே இந்த சூழ்நிலையில் நமது கிராம மக்களின் வைத்தியத்தேவை ஒரு காலத்திலும் பூர்த்திசெய்ய முடியாத தாகவே ஆகிவிட்டது.

குறுகியகால்லப் படிப்பாகிய அல்லோபதி L. M. P.யையும், இந்திய L. I. M. படிப்பையும் நிறுத்திய சர்க்கார், இன்று அல்லோபதியில் ஒரு குறுகியகாலப் படிப்புத்திட்டத்தைக் கொண்டுவரத் திட்டமிட்டிருப்பதாகத் தெரிகிறது. இத் திட்டத்தினுல் அதிகச் செலவின்றி **ஒரு மாதிரியான** டாக்டர்களை உற்பத்திசெய்து கிராமங்களுக்கு அனுப்பிவிடலாம் என்று சர்க்கார் நினைக்கிறது. அதிகச்செலவின்றி டாக்டர்களை உற்பத்தி செய்தாலும், இந்த டாக்டர்கள் செய்யும் சிகிச்சைகள் அதிகச்செலவின்றி இருக்குமா என்பதை அவர்கள் கவனித்ததாகத் தெரியவில்லை. உதாரணமாக இன்று அல்லோபதி டாக்டர்கள் முன்போல் பல கூட்டுமருந்துகளைக் கொண்ட மருந்துச் சீட்டுகளை எழுதுவதில்லை. அந்தப் பழக்கம்போய் வெகுநாட்கள் ஆகிவிட்டன. தினே தினே ஆராய்ச்சிகளைச்செய்து புதுப்புது மருந்துகளைக் கண்டுபிடிக்கிருர்கள். அப்படி சமீப காலங்களில் கண்டுபிடிக்கப்பட்ட சில மருந்துகளின் விலைகள் மிக மிக அதிகமாக இருக்கின்றன. பெனிஸில்லின், டெர்ராமைஸின், ஆரோமைஸின், க்ளோரோமைஸிடின், ஸ்ட்ரேப்டோமைஸின், சல்பா மருந்துகள், வைட்டமின்கள், இவைகள் தான் இன்று அல்லோபதியர்களிடம் அதிகம் உபயோகப்படும் ஔஷதங்கள், தவிர இவை சர்வரோக நிவாரணிகளாகவும் இருக்கின்றன. குறுகியகாலப் பயிற்சிபெற்ற அல்லோபதியர்களும், இந்த மருந்துகளைத்தான் உபயோகிக்கவேண்டும். இந்த மருந்துகளைக்கொண்டு சிகிச்சை பெறுவதற்கு ஒருநாளைய மருந்துச்செலவு மாத்திரம் சுமார் 10 ரூபாய்களுக்குக் குறையாமல் ஆகிறது. நமது கிராமாந்திர மக்கள் வியாதியுற்ருல் இந்த மருந்துகளைக் கொண்டு வைத்தியம் செய்துகொள்ளுவதற்கு வசதியுள்ளவர்களாக இருக்கின்ருர்களா என்பது கவனிக்கப்பட்டதாகவே தெரியவில்லை. அல்லது இவ்வாறு அல்லோபதி வைத்தியம் கற்று கிராமத்திற்கு வைத்தியர்களை அனுப்பி, கிராம மக்களுக்கு வைத்தியம்செய்ய அரசாங்கம் இந்த மருந்துகளையும், கிராமங்களுக்கு இலவசமாக விநியோகிக்க ஏற்பாடுகள் செய்யுமாவென்பது தெரியவேண்டும். அவ்வாறு இம்மருந்துகள் கிராம மக்களுக்கு இலவசமாக விநியோகிக்கப்படமாட்டாதென்ருல், அல்லோபதிப் பயிற்சி அளிக்கப்பட்ட "வைத்திய உதவி"கள் கிராமங்களுக்குத் தேவைப்படாதவர்களாகவே ஆகிவிடுவார்கள் இவர்களினுல் கிராம மக்களுக்கு யாதொரு பிரயோசனமும் ஏற்படாது.

நமது கிராமங்களுக்கு உண்மையிலேயே வைத்திய வசதி செய்துதா வேண்டுமென்று அரசாங்கம் விரும்புமாஞல், அவ்வாறு செய்து தரப்படும்

வசதிகள் கிராம மக்களுக்குப் பயன்படக்கூடியதாக இருக்கவேண்டுமானல், இன்றய சூழ்நிலையில் ஹோமியோபதி தவிர வேறு ஒன்றும் அதற்கு லாயக்குள்ளதல்ல என்பதை வற்புறுத்த விரும்புகிறோம். உயர்நிலைப்பள்ளியில் தேர்ச்சிபெற்ற மாணவர்களுக்கு சுமார் இரண்டு வருடங்கள் சுத்தமான ஹோமியோபதி முறையில் பாடங்கள் சொல்லித்தந்து, மேலும் ஒரு வருடம் அரசாங்க ஜில்லா ஆஸ்பத்திரிகளில் ரணசிகிச்சை முதலியவற்றில் நேரடிப் பயிற்சியும் அளித்து, அதன் பின்னர் இவர்களை கிராமாந்திரங்களுக்கு அனுப்பினல், மிகவும் குறைந்த செலவில் நமது கிராம மக்களுக்கு வைத்திய வசதி கிடைத்தேதீரும். தவிர ஹோமியோபதி ஔஷதங்களின் விலையும் மிகவும் குறைவாக இருப்பதால், அதிக சிரமமின்றி அரசாங்கமே எல்லா மருந்துச் செலவையும் செய்தும் விடலாம்.

ஹோமியோபதி வைத்திய முறையைப்பற்றிக் குறைவாகக் கூறவில்லை என்றும், தற்சமயம் ஹோமியோபதியர்களாகத் தொழில் நடத்துபவர்கள் சரியான பயிற்சியுடையவர்கள் அல்லவென்றும் சமீபத்தில் அரசாங்கத்தால் சட்டசபையில் தெரிவிக்கப்பட்டது. எந்த முறையிலாவது குறுகியகால பயிற்சி அளித்து கிராமங்களுக்கு டாக்டர்களை அனுப்பவேண்டிய அவசியம் வந்திருக்கும்போது அரசாங்கம் ஏன் ஹோமியோபதிக்கு அந்த சந்தர்ப்பத்தை அளிக்கக்கூடாது எனக் கேட்க விரும்புகிறோம்.

தவிர அல்லோபதியில் குறுகியகாலத் திட்டம் ஆரம்பிக்கப்படுவது, சென்னை சர்வகலாசாலை உப அத்யக்ஷகர் டாக்டர் லெக்ஷ்மணசாமி முதலியார் உள்பட அனேகரால் எதிர்க்கப்படுகிறது. இந்த சூழ்நிலையில் நாம் மேலே எடுத்துக்காட்டியபடி எல்லா வகையிலும் பொருத்தமாயுள்ள ஹோமியோபதிக்கு இந்த சந்தர்ப்பத்தில் அரசாங்கம் சலுகை கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்துகிறோம். இதைவிட வேறு நல்ல சந்தர்ப்பம் இது விஷயமாக அவர்களுக்குக் கிடைப்பது அரிது.

ஸ்திரீகளின் சகல கர்ப்பாசயக் கோளாறுகளுக்கும்

"சோதரி"

நிகரற்ற ஔஷதம்

விபரங்களுக்கு

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்

ஹோமியோ ஹவுஸ் — கும்பகோணம்

ஜலதோஷம்

டாக்டர் T. A. ரங்கசாமி, கோபிசெட்டிபாளையம்

இவ்வியாதி ஆரம்பிப்பது சிறிது அசதி, குளிர், தலைகனம், தும்மல் அடிக்கடி நாசியை சிந்தும் வேதனையுடனும், தண்ணீர் போன்ற மூக்குச்சளி கண்களில் நீர்வடிதலும் ஏற்படும். இது கடுமையானல் இருமல், தொண்டை கரகரப்பு, சுரம், வேகமுள்ளநாடி, பசியின்மை, உடம்புவலி, இவைகளும் தோன்றும். இதுவே பிரான்கைடிஸ். நிமோனியா, ப்ளூரஸி, இன்ப்ளுயன்ஸா முதலியவைகளும் ஏற்பட முதற்படியாகலாம். ஆகவே உடனடியாக சிகிச்சைசெய்வது நல்லது.

நமது அனுபவமுள்ள ஔஷதங்களை வெளியிட்டிருக்கிறேன்

காம்பர்: உடனே கொடுக்க சிறந்த மருந்து.

அகோனைட்: நீர்வடிதல், சுரம், தாகம், அமைதியின்மை, வரண்ட சில்லிப்பு, தூக்கமின்மை விசாரம், பயம் இதுவே போதும்.

யூபரேஷியா: கண்களிலிருந்து நீர்வடியும், ஜலதோஷத்துடன் தும்மல்.

ஜெல்ஸிமியம்: கோடைகாலத்தில் ஜலதோஷம் மூக்கிலிருந்து தண்ணீர்போல வடியும். இருமல், கம்மல், அகோனைட்டிற்குப் பிறகு உடம்பெல்லாம் அசதி வலி.

அல்லியம்சிபா: ஏராளமான ஜலதோஷம், தலைவலி, தும்மல் ஏற்படுதல், துடைத்தால் அதிகமாகுதல் காரமுள்ள நீர் தண்ணீர் போன்ற ஒழுக்கு.

காலிபைகிரோம்: நாள்பட்டசளி, கம்பிப்பிசின்போன்ற கோழை, நாக்கு மஞ்சள், மாசு படர்ந்திருக்கும். மூக்கில் இரணம் வாசனையறியும் சக்தியிழத்தல் முக்கியமாக கொழுத்து தொள தொள என்றிருக்கும் குழந்தைகளுக்கு நல்ல மருந்து.

பிரியோனியா: தொண்டைச்சளி, பிளக்கும் தலைவலி, இருமல்.

டல்காமரா: வரண்ட ஜலதோஷம், மூக்கு அடைத்துப்போய் விடுதல் கெட்டியான மஞ்சள் நிறமுள்ள இரத்தப்பொறுக்குகள் கலந்த நீர் வெளியாகுதல்.

ஸ்டிக்டா: நெற்றியிலும், மூக்கின் அடிப்புறத்திலும் கனத்த வலி அடிக்கடி மூக்கை சிந்திக்கொண்டே இருத்தல். சளி வந்தால் சாதகம். மூக்கின் உட்பக்கம் வரண்ட வலியுடன் இருத்தல் தூங்க முடியாது, படுக்க முடியாது, எழுந்திருந்து உட்கார்ந்து கொள்ளவேண்டும்.

பாலுண்ணி

Dr. M. R. சாவித்திரி, A. M. I. H., சேலம்.

சுமார் 20 வயதுடைய பெண்மணிக்கு ஆள்காட்டி விரலில் ஒரு குண்டு மணி அளவு இருந்தது. அப்பெண்மணி கூறியதாவது:— எனக்கு இப் பாலுண்ணி ஒன்றும் உபாதையை கொடுக்கவில்லை என்றும் அது பார்ப்பதற்கு அருவருப்பாக இருப்பதாகவும் ஏதாவது வேலை செய்யும்போது அதன்மீது உராய்வதாலுமே வலி உண்டாகிறது என்றார்கள். இதற்காக நான் என் சுற்றத்தார்கள் சொல்லும் வைத்யமுறையை செய்தும் பயனில்லை என்றும் சொன்னார்கள். இன்னும் சிலர் உப்பும், மிளகும், மூன்று அமாவாசை தினத்தில் தேவாலயத்தில் உள்ள குளத்தில் கடவுளை தியானம் செய்து போட்டுவந்தால் சுகமாகும் என்றும் சொன்னார்கள். நான் அவ்விதமும் செய்தேன். ஒன்றுக்கும் இப் பாலுண்ணி அசையவில்லை என்றார்கள். கடைசி முறையாக தங்களிடம் வந்திருக்கிறேன். இதை தங்களால் குண மாக்க முடியுமா? என்றும் சந்தேகத்துடன் கேட்டார்கள். நான் நிச்சயம் கடவுளருளாலும் ஹோமியோபதி துணையாலும் குணமாகிவிடும், கவலைப்பட வேண்டாம் என்று தைரியம் சொன்னேன். பின் அப்பெண்மணிக்கு (NUX-VOMICA) 1 வேளை கொடுத்து பிறகு துஜா 6-ல் தினம் 3 வேளை கொடுத்து வந்தேன். மேல் பூச்சாக துஜா (OINTMENT) போட்டுவந்தேன் 5 தினங்களானபின் பாலுண்ணி வலியாக இருக்கிறதென்றும் தங்களிடம் மருந்து சாப்பிட்டு பெரிதாகவும் வளருகிற தென்றும், தலைவலி போய் திருகுவலி, வந்த கதையாக இருக்கிறதே டாக்டரம்மா என்றும் என்மீதும் மருந்தின்மீதும் பழி பேசினாள் அப் பெண்மணி. நான் மருந்து பொருத்தமாக வேலைசெய்கிறது என்று மன மகிழ்ச்சிகொண்டு அவர்களிடம் இதே மருந்தை இன்னும் நான்கு தினம் கொடுத்து சாப்பிட்டு வாருங்கள். இதற்குள் உங்கள் வலியும் போய்விடும். பாலுண்ணி பழுத்திருக்கிறது, அதுவும் விழுந்துவிடும் கவலைப்படாதீர்கள் என்று மேல்கண்ட களிம்பும் கொடுத்து போட்டுவரும்படி அனுப்பினேன். ஐந்தாவது தினம் முகமலர்ச்சியோடு அப் பெண்மணி என் மருத்துவ நிலையத்திற்கு வந்தார்கள். அப்பெண் கூறியதாவது: ஆரம்பத்தில் தங்களை மனம் நோகும்படி பேசிவிட்டேன் டாக்டரம்மா. பாலுண்ணி வேரற்ற மரம்போல் அடியோடு உதிர்ந்துவிட்டது. மறைந்து கிடக்கும் மாணிக்கமாகிய தங்கள் மருத்துவத்தின் உண்மை அறிந்தேன் என்றும் இன்னும் எண்ணற்ற புகழ் மாலைகளை எனக்கும் ஹோமியோபதிக்கும் சூட்டினார்கள். அவர்களால் இயன்ற சன்மானத்தைக் கொடுத்துச்சென்றார்கள். இன்னும் அப்பெண்மணி நம் ஹோமியோபதியைப்பற்றி அக்கம், பக்கத்திலுள்ளவர்களிடம் தன் விரலைக்காட்டி விளம்பரம் செய்து வருகிறார்கள்.

வாழ்க ஹோமியோபதி

குன்டோபாஸ்

"குன்டோபாஸ்" என்பது பயோ கெமிஸ்டிரி முறையில் முக்கியமான ஐந்து பாஸ்பேட்டுகளையும் கொண்ட ஒரு முக்கிய ஔஷதம்.

ஒவ்வொரு "குன்டோபாஸ்" மாத்திரையிலும், கல்கேரியா பாஸ், பெர்ரம் பாஸ், மெக்னீஷியா பாஸ், காலீ பாஸ், நேட்ரம் பாஸ் இவை ஐந்தும் சரிசமமாக உள்ளன. இது ஒரு சாதாரண கலப்பு ஔஷதம் அல்ல. ஆனால் இந்தப் பாஸ்பேட்டுகளின் சுயநிலைமையில் கலக்கப்பட்டு, அதன்மேல் விரியப்படுத்தப் பட்டது ஆகும்.

"குன்டோபாஸ்" அனேக வியாதிகளில் மிகவும் உபயோககரமாக இருக்கிறது. முக்கியமாக நரம்பு சத்துக் குறைந்த உபாதிகளில் இது நல்ல வேலை செய்யும். வலிப்புகள், காக்கை வலிப்பு, மூளைக் கோளாறுகள், ஞாபக மறதி, நீரிழிவு, மதுமேகம், ஞாபகக் குறைவு, முதலிய வியாதிகளில் உபயோகிக்கலாம். பற்றுக்குறையும், அதிக அவசரமும் கலந்த இந்தக் காலங்களில், அதிக மூளை உழைப்புள்ள அனைவருக்கும் "குன்டோபாஸ்" ஒரு வரப்பிரசாதமே ஆகும்.

ஒவ்வொரு மாத்திரையும் 7½ க்ரெயின் எடை உள்ளது. இது பெரியவருக்கு ஒரு வேளை மருந்தாகும். சிறுவர்களுக்குப் பாதி அளவு, நாள் ஒன்றுக்கு மூன்று வேளைகள். கூடுமான வரையில் ஆகாரத்திற்கு முன்னதாக. 50 மாத்திரைகள் கொண்ட பாட்டில்கள் அழகான அட்டைப் பெட்டிகளில் கிடைக்கும்.

விலை ரூ. 3—0—0

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்

கும்பகோணம் — மதராஸ்

சிகிச்சைக் குறிப்பு

;DR. K. GOPAL PILLAI, SULUR.

நோயாளி: வயது சுமார் 45. மாநிறம், ஆண்.

தேதி: 16—9—51

உபாதை: க்ஷயம்.

என்னிடம் சிகிச்சைபெற்ற ஒருவரின் சிபார்சின் பேரில் ஷை நபர் என்னிடம் சிகிச்சைக்காக வந்தார். அவரை விசாரித்ததில் அநேக அல்லோபதியர்களிடம் சிகிச்சைப்பெற்றும், T. B. ஸ்பெஷலிஸ்ட்களிடம் X-Ray எடுத்தும், மருந்து சாப்பிட்டும், T. B. சானிடோரியத்தில் இருந்தும் குணம் கிடைக்கவில்லை. அல்லோபதி செப்டேமைசின் ஒரு செட் இஞ்செக்ஷன் செய்தும் யாதொரு குணமும் கிடைக்கவில்லை என்றும் சொன்னார்.

நோயாளியைப் பரிசோதித்து பார்த்ததில் அவருடைய கபம் அல்லது கோழை துர்நாற்றமுடையதாகவும் உடம்பு மிகவும் மெலிந்தும் இருந்தது. கோழையில் இரத்தம் கலந்து வந்தது சதாகாலமும் 101° ஜுரம் இருந்து கொண்டேயிருந்தது. கால், கைகள் எல்லாம் வீக்கமாயிருந்தது. அதைத் தெரிந்துகொண்டு சிகிச்சைக்கு ஆரம்பம் செய்தேன்.

மருந்துகள்: முதலில் பேசில்லினம் 6-இல் 6 வேளை கொடுத்தேன். பிறகு ஜுரம் 100°-க்கு வந்தது. கோழையில் இரத்தம் கலந்து வந்தது சற்று குறைந்து விட்டது. மூன்று நாட்களுக்குப் பிறகு பேசில்லினம் 30x இஞ்செக்ஷன் கொடுத்தேன் அதற்குப்பின் அவருக்குக் காய்ச்சல் 103° வந்தது. ஆறு நாட்களுக்கு மருந்தில்லாத சர்க்கரைக் குளிகைகளைக் கொடுத்தேன். ஜுரம் குறைய ஆரம்பித்தது. வீக்கங்களும் குறைந்தது. ஆறு நாட்கள் சென்றபிறகு டியூபர் குலினம் 200x மூன்று வேளை கொடுத்தேன், கோழையில் துர்நாற்றம் இருந்தது குறைந்தது. ஆகாரம் சாப்பிட ஆரம்பித்தார். அதன் பிறகு முட்டையும் பாலும் சாப்பிடச்செய்தேன். மறுபடியும் கோழையில் இலேசாக இரத்தம் இருந்தது. டிரோஸரா 30xல் மூன்றுவேளை கொடுத்தேன். கோழையில் கலந்துவந்த இரத்தம் நின்றுவிட்டது. ஆகாரம் அதிகமாகச்சாப்பிட ஆரம்பித்தார், பிறகு பேசில்லினம் 200x இஞ்செக்ஷன் வாரமொருமுறை கொடுத்து வந்தேன். இதேபோல் 6 மாதகாலம், வாரமொருமுறை இஞ்செக்ஷன் கொடுத்து வந்தேன், அவரின் எடை என்னிடம் வரும்போது 102 lbs. தான் இருந்தது. மறுபடி அவருடைய எடை 120 lbs.க்கு வந்தது. மறுபடி கல்கேரியாபாஸ் 30xல் விடாமல் இரண்டுமாதகாலம் சாப்பிடச்செய்தேன், முட்டையும், பாலையும் சாப்பிடச்செய்தேன். அவர் எடை 135க்கு வந்தது அவரும் கல்கேரியா பாஸ் 30xஐ விடாமல் சாப்பிட்டுக்கொண்டே வந்தார். இப்பொழுது அவர் தோட்டத்தில் கடினமான வேலைகளைச் செய்துகொண்டு வருகிறார். உடல் நிலையும் நன்றாகவே இருக்கிறது.

பிரசவ உன்மத்தம்

Dr. V. பட்டாபிராமன், M. I. H. எறும்பூர்.

பிரசவ உன்மத்தம் என்பதுபற்றி நம்மவர்களுக்கு தெரிந்திருக்கலாம். இருந்தாலும் என்னால் சிகிச்சை அளிக்கப்பட்ட கேஸைப் பற்றி, சிறிது கூறவிரும்புகிறேன்.

பிரசவ உன்மத்தம் ஏற்படுவதற்கு நரம்புத்தளர்ச்சி, அடிக்கடி ஏற்படும் கர்ப்பம், அதிக மனக்கவலை, விஷ ஜுரங்கள் இவைகளெல்லாம் காரணமாகலாம்.

சென்ற 10—7—52ல் சமீபத்திலுள்ள கிராமம் ஒன்றுக்கு செல்ல நேர்ந்தது. சிக்காளி மிகவும் பலஹீனமான ஸ்திரீ வயது சுமார் 28-க்குள் இருக்கலாம். பிரசவம் 7-வது குழந்தை. அந்த அம்மாளின் தமயனார், என் தங்கைக்கு பிரசவம் ஏற்பட்டு 20 தினங்களாகிறதென்றும், ஒரு நாள் மத்தியானம் கிணற்றடிக்குச் சென்ற சமயம் ஒரு பயங்கர உருவம் கண்ணில் தென்பட்டதாயும் உடனே அதிர்ச்சி அடைந்து கீழே விழுந்து விட்டதாகவும், அன்றையிலிருந்து ஜுரம் வந்து விட்டதாயும் தெரிவித்தனர். என்னை கூப்பிடுவதற்கு முன்னாள் ஒரு அல்லோபதியரை (டாக்டர்) அழைத்துச்சென்று காண்பித்திருக்கிறார்கள். ஷை டாக்டர் முதல் நாள் பெனிஸிலின் 5 லட்சம் இஞ்சக்ஷனும் ஏதோ மிக்சரும் கொடுத்து சாப்பிடச்செய்து மறுநாள் மறுபடியும் 5 லக்ஷம் பெனிஸிலினும், சிபசால் மாத்திரைகளும் கொடுத்திருக்கிறார். இப்படியாக தொடர்ந்து 3 தினங்கள் சிகிச்சை நடைபெற்றது. குணத்தைப் பார்க்கும் அளவில் ஷை ஸ்திரீக்கு ஒன்றுமில்லாமல் போகவே என்னை அழைத்து காண்பித்திருக்கிறார்கள். நான் ஏற்கனவே அவ்வூரில், காலரா, ஜுரங்கள் முதலான கேசுகளை சௌகரியம் செய்திருக்கிறபடியால், என்னிடம் நம்பிக்கை ஷை கிராமத்தார்களுக்கு உண்டு. இருந்தும் சில பெரிய மனிதர்கள் அல்லோபதி வைத்தியத்தால் இது தீர்க்கமுடியுமென்று வற்புறுத்தி சொன்னதினால் ஷை டாக்டர் வந்து சிகிச்சை செய்யும்படி ஏற்பட்டது.

நான் போய் வியாதியஸ்தரைப் பரீக்ஷித்த அளவில் கை, கால் கோணல் மாணலாக இழுப்பு படுக்க முடியாது வாயை திறக்கமுடியாதபடி பல் கிட்டியிருந்தது. உறவினர்கள் யாரையும் தெரியாது. கிள்ளினாலும் உணர்ச்சி தெரியாது. நீர் பிரியாமலிருத்தல் சில சமயங்களில் திருடர்கள் வந்து விட்டார்கள், பயங்கரமான பிசாசுகள் வந்து நிற்கின்றன என்று சில சமயம் சொல்லுவது சதா ஒரு பக்கத்திற்கு ஒரு பக்கம் ஆட்டம், நாடி நிமிஷத்திற்கு (105) துடிப்பு

மலபந்தம், இவைகளுடன் 104°F சுரம் காணப்பட்டது. கண்களோ ஒளியிழந்து, பஞ்சடைந்து பார்க்க பயங்கரமாக, வியாதியஸ்தர் தோற்றமளித்தார். முதலில் ஒரு எனிமா கொடுத்து விட்டு அல்லோபதியில் அவர்கள் ஊசியும் போட்டு, மருந்தும் கொடுத்திருப்பதால் நக்ஸ்வாமிகா 30-ல் 2 சொட்டு 1cc. டிஸ்டில்டு வாட்டரில் கலந்து ஒரு இஞ்செக்ஷன் செய்தேன்.

பிறகு காலையில் அகோனைட் 200-ல் 3 டோஸ் கரைத்து 2 மணிக்கொரு தரமாக, சாப்பிடச்செய்தேன். மத்யானம் 3 மணிக்கு ஹையாஸ்யாமஸ் 200-ல் 4 டோஸ் கரைத்து 2 மணிக்கொருதரமாக கொடுக்கச்சொல்லிவிட்டு, வந்து விட்டேன். மருந்தை உட்செலுத்துவதற்கு வாயை ரப்பர்துண்டுபோட்டு, நெம்பி மருந்து கொடுக்கப்பட்டது. எனக்கோ இரவு தூக்கமே வரவில்லை. அவளுக்கு வியாதி சௌகரியமாகுமா? வேறு எப்படி முடியுமோ என்னிடம் நம்பிக்கை உள்ளவர்கள் நம்பிக்கையில்லாமல் போக, என்ன நேருமோ என்று பயந்தேன். மறுநாள் காலையில் போய்ப்பார்த்ததில் நாடித்துடிப்பு (100) இருந்தது. வாய் திறக்க மூட சரியாய் வந்து விட்டதென்றும், நீர்ப்பிரிகிறது என்றும், இரவு படுத்து கொஞ்சம் தூங்கினுள் என்றும் ஆனுல் இழுப்பு மாத்திரம் முன்பு இருந்ததைவிட, தற்சமயம் அதிகமாய் இருக்கிறதென்றும், அவளது உறவினர்கள் தெரிவித்தனர். நான் கொடுத்த மருந்து வேலை செய்வதைப்பற்றி மகிழ்ச்சி அடைந்தேன். அன்றையதினம், அகோனைட்டை நிறுத்திவிட்டு, ஹையாஸ்யாமஸ், சிங்கம் இவைகளை, மாற்றி மாற்றி, 6 வேளை கொடுக்கச் செய்தேன். அன்றையிலிருந்து ஷ இரண்டு மருந்துகளையும் மாற்றி மாற்றி சாப்பிடச்செய்து, இப்படியாக அவளுக்கு 1 வாரத்தில் பூரணகுணம் கண்டது. தாயும் குழந்தையும் சௌக்கியமாயிருக்கிருர்கள். இச்சம்பவத்திற்குப் பிறகு அக்கம்பக்கத்திலுள்ள ஜனங்கள் என்னை மிகவும் புகழ்ந்து ஒரு இங்கிலீஷ் டாக்டர் சௌகரியம் செய்யமுடியாத சிக்கலான கேஸை, ஒரு ஹோமியோபதியர் சௌகரியம் செய்ததைப்பற்றியும், அநேக புகழ்மாலைகள் சூட்டினுர்கள்.

இன்று நான் எனது கிராம ஜனங்களுக்கு சிறந்த முறையில் வைத்தியம் செய்து வருகிறேன். எல்லோரும் ஹோமியோபதியை விரும்பி சிகிச்சைப் பெற்றுக்கொள்கிருர்கள், எல்லா கேஸ்களிலும் சென்றவிடத்திலும், எனக்கு வெற்றிமேல் வெற்றி கிட்டிவருகிறது தங்களின் குறையாத ஆசீர்வாதத்தினுல்.

வாழ்க ஹோமியோபதி இவ்வையகமுழுதும்

•

ஒரு தம்பிடியில் காலரா சிகிச்சை

Dr. C. M. ராஜரத்னம் M. I. H.

29–8–52உ இரவு சுமார் 2-30 மணிக்கு, நான் குடியிருக்கும் அடுத்தத் தெருவிலுள்ள ஒருவர் தூங்கிக்கொண்டிருந்த என்னை அவசரமாக எழுப்பினார். நான் விழித்து விசாரித்தேன். தன் வீட்டில் ஒருவருக்கு வயிற்றோட்டம் கண்டிருப்பதாகவும், என்னை வந்து உடனே சிகிச்சை செய்யும்படியும் கோரினார். நான் வியாதியஸ்தர் படும் அவஸ்தையை இவர்மூலம் தெரிந்துகொண்டு ஒரு செட் தயார்செய்தேன். அதாவது, "விராட் ஆல், கம்போரா, குப்ரம் மெட், காலோசிந்திஸ்" இதுகளை எடுத்துக்கொண்டு வந்தவருடன் புறப்பட்டேன். மேலும் இரவாக இருந்ததாலும், வேறு பெரிய அல்லோபதி டாக்டர்கள் போல, பெரிய ஆயுதப்பெட்டி, டாக்டர்களின் பாசக்கயிரான ஸ்டெதாஸ்கோப், எனிமாகேன், சிரிஞ்சுகள் முதலியவைகள் எடுத்துச் செல்லவில்லை. இம்மாதிரி எடுத்துச்செல்ல எனக்கு எப்போதும் விருப்பமும் கிடையாது. தற்காலம் இன்சக்ஷன் செய்தால்தான் பிழைப்பார்கள் இல்லாவிட்டால் இறந்துவிடுவார்கள் என்று வற்புருத்துகிறார்கள் டாக்டர்கள். அதுபோலவே நோயாளியும் ஊசி போட்டுக்கொண்டால்தான் நல்லது என்று சொல்லுகிறார்கள். என் அநுபவத்தில் ஹோமியோபதி மருந்துகள் உபயோகம் செய்தால், இன்சக்ஷன் செய்தால் வியாதியை எவ்வளவு சீக்கிரத்தில் குணம் செய்கிறதோ, அதே நேரத்தில் வாயின் வழியாக உண்ணப்பட்ட மருந்தும் வேலை செய்கிறது. ஆனால், அபாயகரமான வியாதிகளில் வாயின்வழியாக உண்ணப்பட்ட மருந்து அதிசீக்கிரம் வேலைசெய்யப்படுகிறது. நீடித்த வியாதிகளில் சற்று மந்தமாக வேலைசெய்கிறது. ஆகவே இன்சக்ஷன் ஒன்றுதான் துரிதமாக வேலைசெய்கிறது என்பது என் அநுபவத்தில் வித்யாசம் தெரியவில்லை. இப்போது நோயாளியைப் பார்ப்போம். சற்றுநேரத்திற்கெல்லாம் நோயாளியின் வீட்டிற்குச் சென்றேன். நோயாளியைப் பார்த்ததில், நோயாளி கட்டிலில் படுத்துக்கொண்டு இருந்தார். வயது 32. ஆண். விசாரித்ததில், இன்று இரவு சுமார் 11 மணியிலிருந்து வயிற்றோட்டம் ஆரம்பித்ததாகவும், இதுவரை 10, 12 தடவை மலம் கழிந்ததாகவும், வாந்தி ஏராளமாக தண்ணீர்போல் 10 தடவை எடுத்ததாகவும் சொன்னார்கள். பிறகு நோயாளியை நான் எழுப்பி எப்படி இருக்கிறது என்று கேட்டேன். அவர் உடம்பெல்லாம் முறுக்குகிறது, வயிற்றில் வலி இருக்கிறது. வயிற்றினுள் பிசைவதுபோல் இருக்கிறது. ஒருதரம் வயிறு பிசைவது

போல் இருக்கும்போது ஒருதரம் வாந்தியாகிறது. ஒருதரம் வாந்தியாகும்போது ஒருதரம் வயிற்ருேட்டம் ஆகிறது. வாய்பூராவும் பிசிபிசிப்பாக இருப்பதாகவும், தொண்டை காய்ந்து இரணமாக இருக்கிறது என்று கூறியும், தனக்கு சாவு பயம் இருப்பதாகவும் கூறினர். நான் வயிற்றை அமுக்கிப்பார்த்தேன். வயிற்றில் உப்பிசம் இல்லே. கெட்டியாகவுமில்லே. சரீரம் உஷ்ணமாகவே இருந்தது. ஆனல் பொதுவாக வியாதியஸ்தர் மீனைப்போல் துள்ளிக்கொண்டே தான் படுத்திருந்தார். ஆனல் கடவுளை வேண்டுவதுபோல பினத்திக்கொண்டும் இருந்தார். நான் உடனே என் வேலையைப் பார்க்கத் தொடங்கினேன். என் கையில் விராட்ரம் ஆல்பம்' வீரியம் 30, பவுடராக இருந்தது. ஒரு புளியங்கொட்டை அளவு எடுத்து அப்படியே வாயில் போடச்சொன்னேன். மறு நிமிஷம். இந்த ஒரு வேளை மருந்தில் எல்லாம் குணமாகிவிடும் என்று சொல்லிவிட்டுப் புறப்படத் தயாரானேன். ஆனல் வீட்டிலுள்ளவர்கள் ஒரு வேளை மருந்து எப்படி இந்நோயைக் குணப்படுத்தும் இன்னும் 4 வேளை வேண்டுமென்று சொன்னர்கள். நானும் சரியென்று மருந்தில்லா கலர் மாத்திரை 1 கிரெயின் 6 மாத்திரைகளை கொடுத்து ½ மணி நேரத்திற்கு ஒன்று வீதம் சாப்பிடச்சொல்லிவிட்டு வந்தேன். மறு நாள் 30-8-52ல் காலே நோயாளியை பார்க்கச் சென்றேன். அமைதியாக தூங்கிக்கொண்டிருந்தார். நான் அவரை எழுப்பவில்லே. வீட்டிலுள்ளவர்கள், இரவு ஒரு வேளை மருந்து சாப்பிட்டவுடனேயே ஆச்சரியமாக வாந்தி, வயிற்ருேட்டம் நின்றுவிட்டது. பிறகு கஞ்சி ஆகாரம் கொடுத்தோம். வெள்ளைக்காரன் மருந்தென்ருல் வெள்ளைக்காரன் மருந்துதான் என்று புகழ்ந்தார்கள். அன்று மாலே நோயாளியை சந்தித்தேன். அவர், வயிற்ருேட்டம் மட்டும் இன்று 2 தடவை போனது. மிகுதி கஷ்டமில்லே என்ருர். பிறகு சரியாய் போய்விடும் என்று சொல்லிவிட்டு வந்தேன். மறுநாளே அவர் சைக்கிளில் ஆனந்தமாக பிரயாணம் செய்துகொண்டு இருக்கிருர். ஆகவே, எந்த வைத்தியத்திலும், அல்லோபதி, யூனி, ஆயுர்வேதம், சித்தம் எந்த முறையிலும் இந்த 1 தம்பிடி செலவில் இந்த காலராவை தடுக்க ஹோமியோபதியைத் தவிர வேறு மருந்துகள் கிடையாது. வேண்டுமானல் யார் வேண்டுமானலும் சவால்செய்து பார்க்கலாம். உலகில் குறைந்த சிலவில் நோய் குணப்படுத்திக் கொள்ளவேண்டும் என்ற நினைவு உள்ளவர் ஹோமியோபதியைத் தான் நாடவேண்டும்.

தவிர, சில பெரியோர்கள் கூறுகிருர்கள், ஹோமியோபதி வைத்தியம் என்ன வைத்தியம்? கத்துக்குட்டி வைத்தியம். அதில் என்ன செய்யமுடியும்? அவர்களிடம் என்ன இருக்கிறது? ஒரு மருந்துப்பெட்டியும், ஒரு புத்தகமும்தான் இருக்கிறது என்று

சொல்லுகிருர்கள். ஏன்! நமது மந்திரியார்கூட இம்மாதிரி கூறியுள்ளார் என்பதை நாம் அனைவரும் அறிவோம். அதாவது, டாக்டர்கள் என்று கூறிக்கொண்டு கல்லூரிகளில் படித்து பட்டம் பெற்றுக்கொண்டு இருந்தால், அவர்கள் பயிற்சி உள்ளவரென்றும், தத்துவங்களை அறிந்து வைத்தியம் செய்தால் கத்துக்குட்டி வைத்தியம் என்றும் நினைக்கிருர்கள். இது தவறு. இன்று ஒரு கல்லூரி பட்டம் பெற்ற டாக்டர் என்ன செய்கிருர்? நோயாளிக்கு ஏற்பட்ட நோய்க்கு பல கம்பெனிகளில் தயாரித்து விற்கும் மருந்தை வாங்கி உபயோகிக்கிருர். அவர் அநுபவத்தில் அம்மருந்து சரியாக வேலை செய்துவந்தது. அம்மருந்து கம்பெனி எது காரணத்தாலோ நசிந்துவிட்டது என்று வைத்துக்கொண்டால் இந்த டாக்டர் தன் அநுபவத்திலிருந்த மருந்தை கைவிட்டு புது மருந்தை உபயோகிக்கத் தலைபடுகிருர். ஆனல் அது கெடுதல் செய்யுமா என்பது இந்த டாக்டருக்கு எப்படித்தெரியும். அவர் அதை நோயாளிக்கு பரிட்சை செய்து ஒன்றிரண்டுபேர் இறந்தபிறகே, இம்மருந்து விஷமுள்ளது அல்லது நோயை கண்டிக்கவில்லை என்று உணருகிருர். அம்மாதிரியாக மருந்து தயாரிப்போர் யார்? அவர்களும் கல்லூரிகளில் படித்து பட்டம்பெற்ற பிறகு மருந்து தயாரிப்பதில் ஈடுபடுகிருர்கள். இவர்கள் ஒரு மருந்தை உற்பத்திசெய்வதற்கு எந்தவிதமான ஆராய்ச்சிகள் செய்கிருர்களா? அதுதான் கிடையாது. மனதிற்கு தோன்றினதை மருந்தாக்குகிருர்கள். டாக்டர்தான் ஆராய்ச்சி, பரிசோதனை செய்கிருரா? அதுவும் இல்லை. பல நோயாளி இறந்த பிறகே டாக்டரின் ஆராய்ச்சி முடிவடைகிறது. இதை கவனிப்பாரோ சிந்திப்பாரோ யார்? இது இப்படியிருக்க ஹோமியோபதி வைத்தியர்களுக்கு பயிற்சி இல்லையென்று மந்திரிகள் கூறுகிருர்கள். ஹோமியோபதியர்களின் பயிற்சி நோயாளிக்கு எந்த அளவில் ஒளஷதம் கொடுக்கவேண்டும் என்று தெரிந்தால்போதும், மருந்தின் ஆராய்ச்சிகள், இது எந்த ஊர் நோய் என்று தெரியவேண்டியதில்லை. காரணம் பலநூறு ஆண்டுகளுக்கு முன்பே, நமது முன்னேர்கள் மருந்துகளின் ஆராய்ச்சியைப் பலப்படுத்தியிருக்கிருர்கள். அதையே நாம் பின்பற்றினல் போதும். நமக்கு நவீன ஆராய்ச்சிகள் தேவை இல்லை.

நாம் பணக்காரன் ஆகவேண்டும். பட்டம் பெறவேண்டும். மதிப்பு வேண்டும் என்ற இந்த குறிகள் தேவையானல் கல்லூரிகளில் பட்டம் பெறவேண்டும், ஏழைகளை காப்பாற்றவேண்டும். ஏழைகளும் நம் தோழர்கள்தாம். நம் கிராமத்தில் நோய் என்பதே தலைகாட்டக்கூடாது, நமக்கு பணம், மதிப்பு, பட்டம் ஒன்றும் வேண்டாம். பொதுஜனங்களின் அன்புமாத்திரம் போதும் என்ற குறிகள் தேவையானல் ஹோமியோபதியின் தத்துவத்தை கற்றல் போதும் என்ற நிலையை மந்திரிகள் உணர்வார்களா?

ஹோமியோபதியின் சாரம்

Dr. K. சுப்ரமண்யம், போடிநாயக்கனூர். (மதுரைஜில்லா)

(முன் தொடர்ச்சி)

இனி உண்மையில் வியாதி ஏற்பட்டுவிட்டதானல் அவ் வியாதியை எப்படி நீக்கவேண்டும் என்பதைப்பற்றிப் பேசுவோம். அதாவது ஒரு உண்மை வியாதியை நிவர்த்திக்கவேண்டுமானல் அவ் வியாதியானது எந்த எந்த விதமான குணங்குறிகளை அதாவது இயற்கைக்கு விரோதமான உபத்திரவங்களை ஏற்படுத்துகின்றதோ அதேபோல உள்ள குணங்குறிகளை உண்டுபண்ணக்கூடியதான ஒரு வித செயற்கை வியாதியை அதாவது ஏற்கெனவே இருந்துவரும் வியாதியைவிட சற்று அதிக பலமுள்ளதாயும் நம்மால் கொடுக்கப் பட்ட மருந்தினல் ஏற்படுத்தப்பட வேண்டும். அம்மாதிரியாக ஏற் படுத்தினல்தான் ஏற்கெனவே இருந்துவந்த உண்மை வியாதியை நாம் கொடுத்த மருந்தினல் ஏற்படுத்தப்பட்ட செயற்கை வியாதி யினல் தாக்கப்பட்டு அங்குள்ள உண்மை வியாதியை நிச்சயமாகவும் சீக்கிரமாகவும், வேருடனும், சாஸ்வதமாக நிவர்த்திக்க முடியும். ஆகையால் அம்மாதிரியான செயற்கை வியாதியை ஏற்படுத்துவதில் நம்மால் கொடுக்கப்படும் மருந்துகள் வியாதியின் தன்மை எப்படிப் பட்டதோ அதே மாதிரியான தன்மையிலும் இருக்கவேண்டும். இதை விளக்க ஒரு சிறிய உதாரணம் சொல்லுகிறேன் கேளுங்கள்.

அதாவது ஒவ்வொரு மருந்திலும் இரண்டு விதமான குணங்கள் இருக்கின்றன. அதில் முதன்மையாகவுள்ளது (Primary action) இரண் டாவதாகவுள்ளது (Dynamic action) இதில் முதலாவது குணமாகிய (Primary action) கடுமையாகவும், முரட்டுத்தனமாயும் ஆனல் குறைந்த காலத்துக்குதான் இருக்கும் இது வீரியப்படுத்தாத அதிக அளவு மருந்தினல் ஏற்படும் குணமாகும். ஆனல் இரண்டாவது குணமாகிய Dynamic தத்துவ அணுக்களால் ஏற்படுத்தப்படும் மிருதுக் குணம் நீடித்த குணமுள்ளதாயும், மிருவானதன்மையுள்ளதாயும், ஆனல் அதிக பலமுள்ளதாயும் இயற்கைக்கு ஒத்ததாயும் இருக் கின்றது. இது முறைபடி வீரியப்படுத்தி அணுக்களாகப் பிரிக்கப் பட்ட மருந்தின் குணமாகும். இதற்கு உதாரணமாக அபினை எடுத்துக்கொள்வோம்.

அந்த அபினை வீரியப்படுத்தாமல் அப்படியே ஒரு மனிதன் உட் கொண்டால் சிறிது நேரத்தில் அம்மனிதன் அரைக் கண் மூடியபடி

யான ஆழ்ந்த மயக்கத்துடனும் கர்பூர் என்ற மூச்சுக் கோளாறுகளுடனும், நிவர்த்திக்க முடியாத மலபந்தத்துடனும் இருப்பதைப் பார்க்கலாம். ஆனால் அதே அபினை நமது ஹோமியோபதி முறைப்படி (Dynamic) தத்துவ அணுக்களாக வீரியப்படுத்தி அம்மாதிரியான மயக்கத்துடனிருக்கும் உண்மையான வியாதியினால் கஷ்டமடையும் ஒரு நோயாளிக்குக் கொடுத்தால் அந்த நோயாளி சிறிது நேரத்தில் ஆச்சரியப்படும்படியாக குணமடைந்து தெளிவாக நம்முன் காக்ஷியளிப்பதை நாம் காணலாம். ஆகவே ஹோமியோபதியில் மருந்தின் முதலாவது குணமாகிய (Primary action) உண்மையில் ஏற்பட்ட ஆத்மாவோடு சம்பந்தப்பட்ட வியாதிகளில் மட்டும் உபயோகிப்பதில்லை. ஆனால் இரண்டாவது குணமாகிய Dynamic தத்துவ அணுசக்திகளைத்தான் ஹோமியோபதி வைத்தியத்தில் உண்மையில் ஏற்பட்டிருக்கிற வியாதிகளில் மட்டும் உபயோகிக்கப்படுகிறது.

ஏனென்றால் வியாதியானது நமது கண்களினால் காணமுடியாதது ஆனால் நமது கண்களுக்கு வியாதியாகத் தோற்றமளிப்பது எல்லாம் ஹோமியோபதியின் சட்டத்திற்கிணங்க வியாதியினுடைய விளைவுகள் இவ்விளைவுகளை ஆதாரமாகக் கொண்டு ஹோமியோபதி டாக்டர் ஒருவர் தனது சிந்தனாசக்தியின் மூலம் அவ்வியாதியின் முழுத்தன்மையையும் அதன் பலத்தையும் தெளிவாக தெரிந்து அதற்கான சரியான சிகிச்சையளிக்க போதுமான உதவியளிக்கத்தான் செய்கிறது. ஆனால் உண்மையில் வியாதி என்பது அம்மனிதனின் மூலகாரணமான உயிரைத் தாக்கிய ஒரு விஷம் என்பதாகும். இவ்விஷத்தன்மையானது நமது கண்களுக்குப் புலப்படாத அரூபமான வஸ்து. அது எப்படி என்றால் ஒரு மனிதன் இறக்கும் சமயம் அவனைச் சுற்றிலும் எவ்வளவோ பேர் இருக்கத்தான் செய்கிறோம். ஆனால் அவனுடைய உயிர் போய்விட்டால் அதையும் உணர்கிறோம். ஆனால் அவனுடைய உயிரானது எந்த வழியாய், எங்கு, எப்படி, என்ன உருவத்தில் போயிற்று என்பதை யாராவது பார்த்து இருக்கிறார்களா என்றால், அதுதான் இல்லை. அப்படிப்பட்ட கண்களுக்குப் புலப்படாத ஒரு வஸ்துவில் ஒருவிதமான விஷதன்மை ஏற்படுவது தான் ஹோமியோபதியின் சட்டப்படியுள்ள உண்மையான வியாதியாகும். ஆகையால் அவ்வியாதியை நீக்குவதற்காக கொடுக்கப்படும் மருந்துகளிலுள்ள வியாதியை வெல்லும் சக்தியும் அதே ரூபத்தில்தான் இருக்கவேண்டும் என்பது பொருத்தமாய் தெரிகிறதல்லவா. அம்மாதிரியாக மருந்துகளை வீரியப்படுத்துவதின் மூலம் அரூபமான Dynamic தத்துவ அணுசக்திகளாகப் பிரித்து வியாதியின் அணுசக்திக்குத் தகுந்தபடியாக மருந்தகளை வியாதியில் உபயோகிப்பது இக்காலத்தில் (1952ளுத்தில்) ஹோமியோபதி வைத்திய முறை ஒன்றைத் தவிர வேறு எந்த வைத்திய முறையிலும் கிடையவே கிடையாது.

ஆனால் இவைகளெல்லாம் ஆத்மாவோடு அதாவது உயிரோடு சம்பந்தப்பட்ட விஷம் என்பதாக அனுமானிக்கப்பட்ட உண்மை யான வியாதியை பொருத்த வரையில்தானே தவிர சில அவசரக் கேசுகளிலும் அல்லது திடீரென்று ஏற்பட்ட விபத்துக்களிலும் உயிருக்கு மன்றாடிக்கொண்டிருக்கும் அபாயகரமான தருணத்திலும் அதாவது மூச்சு நின்று போகுதல், ஜலத்தில் மூழ்கி பிரக்ஞை அற்று போதல், பனியினால் விரைத்துப் போதல், அடி, காயம் முதலிய பல எதிர்பாராத விபத்துக்களில் தற்காலீகமாக சாந்தி செய்யக்கூடிய மாற்று மருந்து முறை அல்லது மருந்துகளில் உள்ள முதலாவது குணமாகிய முறட்டுத் தன்மையான Primary action ஐ சமயோஜிதம் போல் (தாய்திராவகங்கள்) புத்தி கூர்மையுடன் உபயோகித்தும், கிழிந்துபோன காயங்களை கிருமி சுத்தம் செய்து தைத்தும், செயற்கை சுவாசமுறை, வென்னீர் ஒத்தடங்கள், முதலிய துணைச் சிகிச்சைகளை சந்தர்ப்பத்துக்கேற்றபடி செய்து தற்காலிகமாக உபாதியை சாந்தி செய்வதும் அவசியமான முக்கிய விஷயங்களே யாகும். இப்படி சமயத்தில் ஒரு ஹோமியோபதியர் இம்மாதிரியாக சிகிச்சை செய்வதில் எவ்விதமான ஆக்ஷேபணையும் இருப்பதாகத் தெரியவில்லை ஏனென்றால்.

இம்மாதிரியாக திடீரென்று ஏற்பட்ட உபாதையினால் அந்த ராத்மாவான உயிர் பாதிக்கப்படவில்லையாயினும் விபத்துக்களினால் ஏற்பட்ட அதிர்ச்சியினால் அந்தராத்மாவான உயிர் தாக்கப்பட்டு கட்டுண்டு கிடக்கிறது இது திடீரென்று தற்காலிகமாக ஏற்பட்டதால் இதற்கு வைத்தியமும் தற்காலீகமாகச் செய்யலாம். அப்படிச் செய் வது ஞாயமும் முறையுமாகும். அம்மாதிரி சிகிச்சையின் மூலம் தற்காலீகமாக விபத்துக்களிலிருந்து விடுவிக்கப்பட்ட அந்தராத்மா வானது தன்னுடைய இயற்கையாகச் செய்யவேண்டிய வேலைகளை உடனேயே செய்ய ஆரம்பித்து விடுவதால் அதன் பின்பு அதற்கு வைத்தியமும் செய்யவேண்டியது இருக்காது.

ஆனால் ஆத்மாவான உயிரோடு சம்பந்தப்பட்டுள்ள உண்மை யான வியாதியில் பலமுள்ள அதிக அளவு மருந்துகளால் உண்டாக்கப் படும் (Primary action) முறட்டுக் குணத்தினால் வியாதியை நிவர்த்திப் பது முடியாது, ஏனென்றால் அது ஆத்மாவான அந்த அரூபமான கண்களுக்குப் புலப்படாத வஸ்துவான உயிரோடு சேர்ந்து வேலை செய்ய முடியாது. வேண்டுமானால் அம்மருந்து தனக்குள்ள அதிக பலத்தைக்கொண்டு ஒருவிதமான அதிர்ச்சியை நோயாளியின் சரீரத் தில் உண்டுபண்ணி முன்பு இருந்து வந்த இயற்கை வியாதியை மறைத்து வைக்கலாம். அப்படிப்பட்ட அதிர்ச்சியானது சரீரத்தில்

இருக்கும் வரை அந்த அதிர்ச்சிக்கு கீழ்ப்பட்ட பலமுள்ள வியாதிகள் தான் அங்கு இருப்பது தெரியாமல் மறைந்து வியாதியானது சௌகரியமடைந்து விட்டதைப்போன்ற தோற்றமளிக்கலாம். ஆனல் அம் மருந்தினுடைய அதிர்ச்சியானது சரீரத்திலிருந்து நீங்கியவுடன் மறுபடியும் வியாதியானது முன்னிருந்ததைக் காட்டிலும் அதிகமான பலத்துடன் திரும்ப வருவதைக் காணலாம்.

டாக்டர் மூர்த்தியின்

"கோல்ட்ராப்ஸ்"

[காச நிவாரணி]

பாட்டில் ஒன்றுக்கு விலை ரூ. 3-12-0

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்

கும்பகோணம்

பர்மா, மண்டலே டாக்டர் **M. பால்** M. B.
அவர்களால் எழுதப்பட்ட

'ஹோமியோபதி குடும்ப வைத்திய சிகிச்சை'

(இரண்டாவது பதிப்பு)

வெளிவந்துவிட்டது

★

விஷயங்களை நல்ல முறையில் விளக்கி
உயர்ந்த காகிதத்தில் நன்ருக அச்சிடப்பட்டிருக்கிறது.

பாக்கெட் சைசில் கெட்டியாக காலிகோ பைண்ட்
செய்யப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு குடும்பத்திற்கும்
ஒவ்வொரு ஹோமியோபதி டாக்டருக்கும்
மிக அவசியமான ஒரு புத்தகம்.

★

விலை ரூ. 2—0—0 தபால் செலவு தனி

பிரசுரகர்த்தர்:

இந்தியன் ஹோமியோபதி இன்ஸ்டிடியூட்

கும்பகோணம் (தென் இந்தியா)

மாகாண நிகழ்ச்சிகள்

சேலம் ஜில்லா ஹோமியோபதியர்களின் மகாநாடு இம்மாதம் 7-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை திருச்செங்கோட்டில் (இம் மஹாநாட்டில் தலைமை வகிக்க இருந்த டாக்டர் V. R. மூர்த்தி அவர்கள் உடல்நலமின்மை காரணமாக வர இயலாதபடியால்,) நாமக்கல், டாக்டர் V. சுப்பையா அவர்கள் பி. ஏ., பி. எல். தலைமையில் நடைபெற்றது. ஏராளமான பிரதிநிதிகள் மகாநாட்டில் கலந்து கொண்டனர்.

டாக்டர் பி. ஸி. முத்து அனைவரையும் வரவேற்றார். மகாநாட்டை சென்னை சட்டசபை மெம்பர் ஸ்ரீ டி. எம். காளியண்ணன் அவர்கள் திறந்துவைத்து, இம்முறை கிராம மக்களுக்குப் பெரிதும் பயன்படுவது பற்றி விரிவாக சொற்பொழிவாற்றினார்.

Dr. சாமுவேல் ஹானிமன் படத்தைத் திறந்து வைத்த ஸ்ரீ என். ஆர் வெங்கட்ராமய்யா இம்முறையை மகான் ஹானிமன் கண்டு பிடிக்க நேர்ந்ததன் அவசியத்தையும், இம்முறையின் சிறப்புகளையும் விளக்கினார்.

மகாத்மா காந்திஜீயின் படத்தைத் திறந்துவைத்து டாக்டர் நஞ்சுராஜு (ஈரோடு) தமது உரையில் காந்தி மகாத்மா கடைப் பிடித்த சாத்வீகக் கொள்கையையே Dr. ஹானிமனும் கடைப்பிடித் திருந்ததையும், அஹிம்சையை அடிப்படையாகக் கொண்ட இம் முறையின் தன்மை பற்றியும் குறிப்பிட்டார். தலைவர் தமது பிரசங் கத்தில் இம்முறையை 'கிரானிக்' வியாதிகள் அதிகம் உள்ள இடங் களில் பிரயோகிக்கவேண்டும் என்றும், இம்முறை பற்றி ஏராளமான அரிய புத்தகங்கள் இருப்பதைக் குறிப்பிட்டு, இம்முறை பற்றிக் குறை கூறுவதற்கு முன்னர் இப்புத்தகங்களை நன்கு படித்தறிந்து கொள்ளவேண்டியது அவசியம் என்றும் கூறினார்.

தலைவருக்குப்பின் டாக்டர் M. K. V. புரி, டாக்டர் ஆர். லோகாபி ராமன், திருச்செங்கோடு ஹைஸ்கூல் தலைமையாசிரியர் திரு. ஷண் முகம் செட்டியார் முதலியவர்கள் பேசினார்கள்.

மகாநாட்டில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. ஒவ்வொரு ஹோமியோபதியரும் தங்கள் கிராம சேவை முன்னேற்றம் பற்றி மூன்று மாதங்களுக்கு ஓர் முறை சங்கத்திற்கு அறிக்கை அனுப்பவேண்டும்.

2. ஹோமியோபதியர் அனைவரும் சங்கத்தில் அங்கத்தினராகச் சேரவேண்டியது அவசியம்.

3. ஹோமியோபதியர்களை அரசாங்கம் அங்கீகரித்து, இம்முறையைப் போதிக்கவும், பயிற்சியளிக்கவும் ஒரு கல்லூரியும், அதற்கிணைந்த ஒரு ஆஸ்பத்திரியும் ஏற்படுத்த அரசாங்கத்தை இம்மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

தஞ்சைக் கூட்டம்

சென்னை மாகாண ஹோமியோபதி மத்ய கவுன்ஸிலின் கூட்டம் ஷை செயற்கமிட்டியினரால் சென்ற முதற்தேதி திங்கட்கிழமை தஞ்சையில் ஸ்ரீ A. S. தவபாண்டியன் தலைமையில் கூட்டப்பட்டது. கூட்டத்தை ஆரம்பித்துவைத்த தஞ்சை சரஸ்மதி மஹால் ஆராய்ச்சியாளர் ஸ்ரீ வாசுதேவ சாஸ்திரிகள், ஹோமியோபதியின் தத்துவம் ஆயுர்வேத ஸித்த வைத்திய முறைகளுக்கு ஒப்பானதே என்றும், இம்முறை விரைவிலேயே அதன் சிகரத்தை அடையக்கூடும் என்று தான் நம்புவதாகவும் நம் நாட்டில் மேன் மேலும் இது வளர்ச்சியடைய வசதிகள் இருப்பதாகவும் தெரிவித்தார். இம்முறையைக் கையாள்பவர்கள் மேலும் மேலும் தங்கள் தரத்தை உயர்த்திக்கொண்டு இம்முறையின் அங்கீகாரத்திற்குப் பாடுபடவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

ஷை கவுன்ஸிலின் நடவடிக்கைகள் பற்றி மதுரை Dr. M. S. ஸ்ரீனிவாசன் குறிப்பிட்டபின் வடாற்காடு ஜில்லா ஹோமியோபதியர் சங்கத்தைச் சேர்ந்த ஸ்ரீ A. வாசுதேவன், பொள்ளாச்சி Dr. K. T. தாமஸ், வேலூர் Dr. V. புருஷோத்தம், தஞ்சை ஸ்ரீ K. ஸ்ரீனிவாசன் M. A., முதலியவர்களும் சொற்பொழிவாற்றினார்கள்.

கீழ்கண்டபடி வரும் வருடத்திற்கு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ராவ்சாகிப் Dr. R. V. சொக்கலிங்கம் பி. ஏ., எம். பி. பி. எஸ்.
தலைவர்.

Dr. V R. மூர்த்தி
Dr. K. T. தாமஸ்
Dr. T. S. தவபாண்டியன்
ஸ்ரீ T. S அய்யர்
Dr. C. P. சந்திரராவ்
} உப தலைவர்கள்.

Dr. M. S. ஸ்ரீனிவாசன் — காரியதரிசி.

வெளியிடங்களைச் சேர்ந்த பல ஹோமியோபதியர்களைக்கொண்ட நிர்வாகக் கமிட்டி ஒன்றும் அமைக்கப்பட்டது.

Edited, Printed & Published by Dr. V. R. MURTY, at the Homoeopathy Press
Homeo House, Kumbakonam.